## துபாயில் திராவிட சங்கமம் -

# இளையோர் குரல் நிகழ்ச்சி கோலாகல நிறைவு விழா!

## இளம் பேச்சாளர்கள் எழுச்சியுரை!




துபாய், ஆக. 3-

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில், GenZ DMK UAE குழுவினரின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற 'திராவிட சங்கமம் - இளையோர் குரல்' கொள்கை விளக்க மற்றும் கலந்தாய்வு நிகழ்ச்சி, 500க்கும் மேற்பட்ட தி.மு.க. உடன்பிறப்புகள் மற்றும் தமிழ் குடும்பங்களின் பேரெழுச்சிமிக்க பங்கேற்புடன் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை GenZ DMK UAE குழுவின் ஒருங்கிணைப்பாளர்களான வேலூர் மா. மணிவண்ணன், E.S. சையத், பிரவின் ஜெயக்குமார், சோனாப்பூர் முகைதீன், வினோத், நாகராஜன் மற்றும் தாரிக் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

அமீரக தி.மு.க.வின் ராஜா, இர்ஷாத், சான்யோ, செல்வகுமார் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளின் வழிகாட்டுதலுடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக, ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த Royal Group of Companies நிறுவனத்தின் இயக்குநர் அப்துல்லா அல் யம்மாஹி கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் இளம் பேச்சாளர்களான ஹரிணி தேஷ்குமார் மற்றும் குழலி சையன், மேலும் ஒருங்கிணைப்பாளர் பிரவின் ஜெயக்குமார் ஆகியோர் திராவிட இயக்கத்தின் வரலாறு, அதன் சமூகப் பங்களிப்பு மற்றும் இன்றைய தலைமுறைக்கான அவசியம் குறித்து எழுச்சியுரையாற்றினர்.

**திராவிடப் பயணம் காணொலி திரைப்படம்!**

திராவிட இயக்கத்தின் வரலாற்றுப் பயணத்தையும், தி.மு.க. அரசுகளின் முக்கிய சாதனைகளையும் எடுத்துரைக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட "திராவிட பயணம்" காணொளி திரையிடப்பட்டு, பார்வையாளர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து, தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை, பேரறிஞர் அண்ணாவின் மாநில உரிமைக் கொள்கை, முத்தமிழறிஞர் கலைஞரின் சமூகநீதிப் பார்வை மற்றும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கொள்கைகளை இளைய தலைமுறையினரிடம், குறிப்பாக Gen Z தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

ஒருங்கிணைப்பாளர்களான வினோத், தாரிக், E.S.சையத் மற்றும் நாகராஜன் ஆகியோரின் தலைமையில், 50க்கும் மேற்பட்ட உடன்பிறப்புகள் தன்னார்வலர்களாக நிகழ்ச்சியின் பல்வேறு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு, நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற முக்கிய பங்காற்றினர்.

திராவிட இயக்கத்தின் சமூகநீதிக் கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்களால் பயன்பெற்று, இன்று வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் உயர்ந்த நிலையை அடைந்துள்ள தமிழர்கள், தங்களது வாழ்க்கைப் பயணத்தையும் நெகிழ்ச்சியான அனுபவங்களையும் மேடையில் பகிர்ந்து கொண்டனர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மிசா காலச் சிறைவாசியுமான தியாகி மிசா அகமது தம்பி அவர்களுக்கு மேடையில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

**கலைநிகழ்ச்சிகள்!**

தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் பறையிசை மற்றும் பாரம்பரிய நடன நிகழ்ச்சி நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் ஒருங்கிணைப்பாளர் வேலூர் மா. மணிவண்ணன் வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினார்.

ஒருங்கிணைப்பாளர் சோனாப்பூர் முகைதீன் மற்றும் இளம் பேச்சாளர் ஹரிணி தேஷ்குமார் நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினர்.

ஒருங்கிணைப்பாளர் E.S. சையத் நன்றியுரை யாற்றினார்.

மேலும் GenZ DMK Gulf ஒருங்கிணைப்பாளர் MRM நபில்ராஜா கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

அமீரக மண்ணில் வாழும் தமிழ் இளைய தலைமுறையினரிடையே திராவிட சிந்தனைகள், சமூகநீதி, பகுத்தறிவு மற்றும் மாநில உரிமைக் கொள்கைகளை உரையாடலின் வழியாக எடுத்துச் செல்லும் நோக்கில் நடைபெற்ற 'திராவிட சங்கமம் - இளையோர் குரல்' நிகழ்ச்சி, அமீரகத் தமிழர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று, எதிர்காலத்திலும் இதுபோன்ற அறிவு சார் மற்றும் கொள்கை சார்ந்த நிகழ்வுகள் தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

---

## கிறித்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் – முன்னாள் எம்,எல்,ஏ,

# இனிகோ இருதயராஜ் சகோதரி எஸ்.ஆஞ்சலோ ஆரோக்கியமேரி மறைவு!

## கழகத் தலைவர் மு.க,ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 3-

கிறித்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் சகோதரியின் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினரும், கிறித்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவருமான இனிகோ இருதயராஜ் அவர்களின் சகோதரி திருமிகு. எஸ். ஆஞ்சலோ ஆரோக்கியமேரி அவர்கள் மறைந்த செய்தியறிந்து, அன்புச் சகோதரர் இனிகோ இருதயராஜ் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, என்னுடைய வேதனையைப் பகிர்ந்துகொண்டேன்.

உடன்பிறந்த சகோதரியின் மறைவால் வாடும் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

---

## இந்திய மாணவர்களின் வேலைத் திறனை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்தவும்,

# தொழிற்கல்வியை வளர்த்தெடுக்கவும் ஒன்றிய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக .3-

திராவிடமுன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 29 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் இந்திய மாணவர்களின் வேலைத் திறனை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டை உறுதிப் படுத்தவும், தொழிற் கல்வியை வளர்த்தெடுக்கவும் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் தேவையான சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப் படுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

அனைத்து பாடப்பிரிவுகளின் கீழ் மாணவர்கள் போதிய அறிவுத் திறனை பெருக்கும் வகையிலும், தொழிற்கல்வியை பள்ளிக் கல்வியின் மூலம் பெற்றிடவும், தேசிய பாடத்திட்டங்களின்படி, தேசிய கல்விக் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், திறன் மேம்பாட்டை உறுதி செய்யவும், தொழில் பழகுநர் முறைகளை மேம்படுத்தவும் கல்லூரிப் படிப்பின் போது தொழிற் சார்ந்த கல்வியில் ஈடுபாட்டினை ஏற்படுத்தவும் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் அரசு பல்வேறு திட்டங்களை முனைந்து வருகிறது என்றும், மும்பாய், கான்பூர், சென்னை மற்றும் கொல்கத்தாவில் அமைந்துள்ள தேசிய தொழில் பழகுநர் ஆணையத்தின் உதவியுடன் 17 இலட்சத்திற்கும் அதிகமான தொழிற் கல்வி மாணவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், தொழிற் கல்வி பழகுநர் திட்டத்திற்கென இதுவரை 2892 கோடிகள் கல்வி உதவித் தொகை செலவிடப்பட்டுள்ளது என்றும், உயர்கல்வி நிறுவனங்களுடன் இதுவரை 459 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், அனைத்து இந்திய தொழிற்கல்வி குழுமத்தின் உதவியுடன் பாடத் திட்டங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்றும், திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை கல்லூரிகள் அதிகரித்துள்ளன என்றும் பல்கலைக் கழக மானிய் குழுவின் உதவியுடன் திறன் மேம்பாட்டு கல்வி அளிக்கப்பட்டு வருகிறது என்றும், ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

## தேசிய நெடுஞ்சாலைகளில்

# பாதுகாப்பு மேம்பாட்டு பணிகள் குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி,ஆக3-

தருமபுரி மாவட்டம் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு மற்றும் புதிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து, தருமபுரி மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆ.மணி மக்களவையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரியிடம் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளின் தற்போதைய நிலை, போக்குவரத்து அடர்த்தி மற்றும் சாலைப் பாதுகாப்புத் தர நிலைகள் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

அவ்வாறு ஆய்வு மேற்கொண்டிருந்தால், தேசிய நெடுஞ்சாலை வாரியாக அதன் விவரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

மேலும், அடிக்கடி சாலை விபத்துகள் நடைபெறும் பகுதிகள், கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவும் இடங்கள், சேதமடைந்த சாலைப் பகுதிகள், போதிய தெருவிளக்குகள் இல்லாத இடங்கள், பாதுகாப்பற்ற சந்திப்புகள், பழுதடைந்த பாலங்கள், பாதசாரிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு வசதிகள் இல்லாத பகுதிகள் ஆகியவை அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளனவா என்பதையும், அவற்றைச் சீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் அளிக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன், கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் பராமரிப்பு, சாலை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்களை ஆண்டுவாரியாக வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் சாலைகளின் போக்குவரத்து திறனை அதிகரித்தல், பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் மாவட்டத்தின் இணைப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கில் புதிய தேசிய நெடுஞ்சாலைத்திட்டங்கள் அல்லது மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு திட்ட மிட்டுள்ளதா என்பதையும், அவ்வாறு இருந்தால் அவற்றின் விவரங்கள் மற்றும் செயல்படுத்தப்படும் கால அட்டவணையையும் வெளியிடுமாறு மக்களவையில் ஆ.மணி கேட்டுள்ளார்.

---

## தஞ்சையில் இன்று உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம்!

# போக்குவரத்து தொ.மு.ச. தோழர்கள் பெருமளவில் பங்கேற்போம்!

## பொதுச்செயலாளர் சு.பாண்டியன் அழைப்பு!

திருவாரூர், ஆக 3–

தமிழ்நாட்டின் விவசாயத்தை கேள்விக்குறியாக்கி, லட்சோப லட்ச மக்களை கண்ணீரில் தள்ளும் தவெக எனும் ஆளுமையற்ற அரசைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தஞ்சையில் இன்று (03.08.2026) எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு போக்குவரத்து தொ.மு.ச.வினர் பெருமளவில் பங்கேற்கவேண்டும் என பொதுச்செயலாளர் சு.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

"மாடுகட்டி போரடித்தால் மாளாது என்று சொல்லி யானை கட்டி போராடித்த, நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடிய சோருடைத்த சோழ வளநாடு , நம் நாட்டு நெற்களஞ்சியம், நாம் வாழும் சோழ வளநாடு. வலம் கொழித்து எழில் கொஞ்ச நீர் தந்தாள் காவிரித்தாய்.

ஆளுமையற்றவர்களின் ஆட்சியில் ஆடிப்பதினெட்டுக்கு கூட நீரின்றிப்போன அவலம். விவசாயிகளின் கண்களில் நீர்வழியும் துயரம். கழக ஆட்சியில் ஜூன்12 மேட்டூர் அணை திறக்கப்பட்டு, நெல் வளமும் மக்கள வளமும் நிறைந்திருந்தது.

தஞ்சை உள்ளிட்ட டெல்டா பகுதி விவசாயி கள் வேதனை துடைக்க காவிரிப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியின் முதல்படியாக , கழகத் தலைவர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆர்ப்பாட்டம் அறிவித்து இருக்கிறார்கள்.

சட்டமன்ற சண்டமருதம் இளம்தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தஞ்சை பனகல் கட்டிடம் எதிரில் இன்று (03.08.2026 திங்கள்) காலை 10.00 மணிக்கு காவிரியில் தண்ணீர் பெற்றுத்தர வாக்கில்லாத தவெக அரசை கண்டித்து நடைபெறும் கண்டன ஆர்ப்பட்டத்தில் போக்குவரத்து தொ.மு.ச. தோழர்கள் பெருமளவில் பங்கேற்கவேண்டும்.

விவசாயம் செழித்து விவசாயிகள் வறட்சியின்றி வறுமையின்றி வாழும் காலம்தான், போக்குவாரத்து கழகத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்தும் என்பதை உணர்ந்து பங்கேற்று , 03.08.2026. இன்று பணி பாதிப்பின்றி வார ஓய்வு DRல் உள்ளவர்கள் அவசியம் பங்கேற்று ஆர்ப்பாட்டம் வெற்றிபெற அணிதிரள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு போக்குவரத்து தொ.மு.ச. பொதுச்செயலாளர் சு.பாண்டியன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## சேலத்தில் த.வெ.க நிர்வாகி மணிகண்டன் மீது பாலியல் புகார்!

சேலம், ஆக.3–

சேலம் கொண்டலாம் பட்டியை சேர்ந்தவர் த.வெ.க நிர்வாகி மணிகண்டன் இவர் மளிகை கடை நடத்தி வந்தார்

இவர் பெண்களை ஆபாசமாக படம்பிடித்து அவர்களை மிரட்டி அவர்களிடம் பாலியியல் உறவு கொண்ட புகாரில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு விசாரணை செய்ததில் அவரிடம் இருந்த மொபைல் போனை போலீசார் பறிமுதல் செய்து சோதனை செய்ததில் ஆபாச படங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவை இருந்ததோடு 50 க்கும் மேற்பட்ட குடும்ப பெண்களின் ஆபாசமாக படம் பிடித்து வைத்திருந்தது தெரிய வந்தது

இந்த வழக்கில் ஜாமீனில் வெளியே வந்த மணிகண்டன் மீண்டும் ஒரு பெண் சூரமங்கலம் போலீ சில் தன்னை ஆபாசமாக படம் எடுத்து மணிகண்டன் மிரட்டியதாக புகார் அளித்தார்

இதையொட்டி இந்த புகார் குறித்து மாநகர போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்போது இந்த புகாரை த.வெ.க நிர்வாகி மணிகண்டனை கைது செய்வதில் காலதாமதம் செய்யப்படுவதாகவும் இந்த புகாரை திசை திருப்பும் வேலையாக மாற்றப்படுவதாகவும் ஆளும் கட்சி த.வெ.க வுக்கு தொடர்ந்து அவப் பெயரை ஏற்படுத்துவதாக இருப்பதால் மணிகண்டனை கைது செய்வதில் காலதாமதம் செய்வதாக கூறப்படுகிறது தூய சக்தி ஆட்சியின் பெண்களின் பாதுகாக்கும் லட்சணம் இதுதான்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை கா. கிட்டு

### ஆகஸ்ட் 3 (2011)



இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி. நடராசன்

### ஆகஸ்ட் 3 (1975)



சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற 'பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை' அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.

'திராவிடன்' என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் "நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்" என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**